**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். நாங்குநேரி**
**முன்னிலை: திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாங்குநேரி**
**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழன்கிழமை**
**அசல் வழக்கு எண்.144/2025**

1. மேரி பரிமளம்

2. S. சுவிட் பியூலா செல்வராணி

3. R. கிறிஸ்டி ஜெபராணி ..... வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் திருநெல்வேலி

மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்

2. வட்டாட்சியர்

வட்டாட்சியர் அலுவலகம், நான்குநேரி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 06.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜாண் சந்திரராஜ்.பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, வழக்கறிஞர் ஆஜராகாத காரணத்தினால் அவர்கள் தரப்பு ஒருதரப்பாக்கப்பட்ட நிலையிலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் :

## தீர்ப்புரை

**1)** வழக்கு வாதியின் சகோதரரான ஜான் ஸ்டீபன்ராஜ் என்பவர் தற்போது உயிருடன் இல்லை என்று சட்ட அனுமானம் செய்து கொள்ள வேண்டி விளம்புகை பரிகாரம் வேண்டியும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதியால்

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) பிராதின் சுருக்கம்</u> :**

வழக்கு வாதியின் சகோதரரும் ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரும் 1ம் வாதியும் ஒன்றாக மேற்படி வேலை பார்த்த இடமான 6-B, 1வது மெயின்ரோடு, 1வது குறுக்கு கருவேபோவிபாளையம், ஓசூர் ரோடு, பெங்களூரு என்ற விலாசத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்து, மேற்படி நபர்களின் பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றும், 2ம் வாதியின் சகோதரர் ஜான்ஸ்டீபன் ராஜ் என்பவரின் வயது 39 என்றும், மேற்படி நபர் நல்ல உடல் நலத்துடனும் ஆரோக்கியத்துடனும் இருந்து வந்து கடந்த 05.03.2006 அன்று முதல் காணவில்லை என்றும், மேற்படி நபர் காணவில்லை என்று தகவல் வாதிகளுக்கு மற்றும் அவரது நண்பர்களுக்கு தெரியாது என்றும், மேற்படி வாதிகளின் சகோதரரை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொண்டும் கண்டுபிடிக்க இயலாத காரணத்தினால் கடந்த 20.07.2008 அன்று வாதிகள் விளம்பர நாளிதழில் அவர் காணாமல் போன விவரத்தை தெரியப்படுத்தியும், 1ம் வாதியும், 2ம் வாதியின் சகோதரரும் ஒன்றாக வாழ்ந்து வந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், கண்டுபிடிக்க இயலாத காரணத்தினால், 2ம் வாதியின் சகோதரர் ஜான் ஸ்டீபன் ராஜ் தற்போது உயிருடன் இல்லை என்றும் மேற்படியார் பத்து வருடங்களுக்கு மேலாக கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், பாரத நியாய சன்ஹிதா பிரிவு 111 படி அவர் இறந்துவிட்டதாக சட்ட அனுமானம் செய்து கொண்ட வேண்டியதாக உள்ளதால் வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிராக 11.12.2025 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் விசாரணை

துவக்கப்பட்டு, 2ம் வாதியான ஸ்வீட் பியூலா செல்வராணி என்பவர் வா.சா.1 ஆகவும், வழக்கிற்கு 3ம் நபரான நெல்சன் துரை தேவமணி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4)** இவ்வழக்கு 1ம் வாதியும் கணவரும், 2ம் வாதியின் சகோதரருமான ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரும் 1ம் வாதியும் ஒன்றாக வேலை பார்த்த இடமான 6-B, 1வது மெயின்ரோடு, 1வது குறுக்கு கருவேபோவிபாளையம், ஓசூர் ரோடு, பெங்களூரு என்ற விலாசத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர். மேற்படி நபர்களின் பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை என்பது வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. 2ம் வாதியின் சகோதரர் ஜான்ஸ்டீபன் ராஜ் என்பவரின் வயது 39 என்றும், மேற்படி நபர் நல்ல உடல் நலத்துடனும் ஆரோக்கியத்துடனும் இருந்து வந்து கடந்த 05.03.2006 அன்று முதல் காணவில்லை என்றும், மேற்படி நபர் காணவில்லை என்று தகவல் வாதிகளுக்கு மற்றும் அவரது நண்பர்களுக்கு தெரியாது என்றும், மேற்படி வாதிகளின் சகோதரரை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொண்டும், கண்டுபிடிக்க இயலாத காரணத்தினால் கடந்த 20.07.2008 அன்று வாதிகள் விளம்பர நாளிதழில் அவர் காணாமல் போன விவரத்தை தெரியப்படுத்தியுள்ளது வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. 1ம் வாதியும், 2ம் வாதியின் சகோதரரும் ஒன்றாக வாழ்ந்து வந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. எனவே 2ம் வாதியின் சகோதரர் ஜான் ஸ்டீபன் ராஜ் தற்போது உயிருடன் இல்லை என்றும் மேற்படியார் பத்து வருடங்களுக்கு மேலாக கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், பாரத நியாய சன்ஹிதா பிரிவு 111 படி அவர் இறந்துவிட்டதாக சட்ட அனுமானம் செய்து கொண்ட வேண்டியதாக உள்ளதால் வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) வாதிகள் தரப்பில் வா.சா.1 ஆக 2ம் வாதி விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பிராதை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் வழக்கிற்கு 3ம் நபரான நெல்சன் துரை தேவமணி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு பிராதை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

6) வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா என்று பார்க்கும் போது, வழக்கில் காணாமல் போன ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரின் தந்தை மற்றும் தாயார் இறந்துவிட்டதும், மேற்படி நபர் காணாமல் போனது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு, மேற்படி முதல்தகவல் அறிக்கை வழக்கு கோப்பில் உள்ளது. பிரதிவாதிகளின் தரப்பிலும் அதனை ஆவணமாக குறியீடு செய்ய எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஜான் ஸ்டீபன் ராஜ் காணாமல் சென்று முதல் தகவல் அறிக்கை 124/2008 பதிவு செய்து சுமார் 7 வருடம் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பாரதிய சாக்ஷிய அதிநியம் படி ஒரு நபர் காணாமல் சென்று 7 வருடத்திற்கு பின்பு தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றும், அதன் படி தான் இவ்வழக்கும் 7 வருடத்திற்கு பிறகு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் முறையாக நாளிதழிலில் விளம்பரமும் செய்துள்ளனர்கள். மேலும் 3ம் நபர் எவரும் ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவர் இருப்பதாக தெரிவிக்காத நிலையில், காணாமல் சென்றவரின் உடன்பிறந்த சகோதரிகளான 2, 3 வாதிகளும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதால் மேற்படி சட்டப்பிரிவின் கீழ் சட்ட அனுமானம் கொண்டு வாதிகள் வழக்கை நிருபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. பிரதிவாதிகளின் தரப்பில் எவ்வித சாட்சிகளோ சான்றாவணங்களோ ஏற்படுத்தவில்லை. வாதிகளின் வழக்கை ஏற்றுக்கொண்டு 1ம் வாதியின் கணவர், 2, 3 வாதிகளின் சகோதரர் ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவர் சட்டப்படி இறந்ததாக கருதப்படுவார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**7) இறுதியாக இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**அ) வாதிகளின் சகோதரரான ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவர் சிவில் மரணமடைந்துவிட்டதாக வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. 2026ம் ஆண்டு மாாச் திங்கள் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்:</u>**
**<u>வாதிகள் தரப்பில்;</u>**

வா.சா.1 : ஸ்வீட் பியூலா செல்வராணி

வா.சா.2 : நெல்சன் துரை தேவமணி

**<u>பிரதிவாதிகள் தரப்பில்</u>: இல்லை**

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்</u>**
**<u>வாதிகள் தரப்பில்</u>** :

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 20.07.2008 | விளம்பர நாளிதழ் |
| வா.சா.ஆ.3 | - | ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரின் தகப்பனாரான சாலமோனின் இறப்பு சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | – | ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரின் தாயரான சுசிலா என்பவரின் இறப்பு சான்றிதழ் |

**பிரதிவாதிகள் தரப்பில் :இல்லை**

**சாட்சி தரப்பு சான்றாவணம்: இல்லை**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**